www.freetnbooks.com

| 8 - ஆம் வகுப்பு | காலாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2:30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100 |

பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **15 x 1 = 15.**

1. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து __________ என அழைக்கப்படுகிறது.
   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து
2. உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ______
   அ) அ,ஆ ஆ) இ,ஈ இ) உ,ஊ ஈ) எ,ஏ
3. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் ______
   அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) பாரதியார்
4. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ______
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ)அன்பில்லாதவர்
5. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ______
   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு
6. தமிழ்த்தாய் ஐம்பெருங்காப்பியங்களை __________ அணிந்துள்ளாள்.
   அ) ஆடையாக ஆ) அணிகலன்களாக இ) மகுடமாக ஈ) மாலையாக
7. மலர்களிலிருந்து வரும் __________ வண்டுகளை நீக்கும்
   அ) அந்தம் ஆ) சந்தம் இ) கந்தம் ஈ) மற்தம்
8. 'வருமென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
   அ) வரும்+என்று ஆ) வரு+என்று இ) வரு+மென்று ஈ) வரும்+மென்று
9. என் நண்பர் பெரும்புலவராக இருந்த போதும் __________ இன்றி வாழ்ந்தார்
   அ) சோம்பல் ஆ) வருத்தம் இ) அகம்பாவம் ஈ) வெகுளி
10. பின்வருவனவற்றுள் இறந்த கால வினைமுற்று ______
    அ) நடக்கிறான் ஆ) உண்பான் இ) ஓடாது ஈ) படித்தான்
11. முறை + எனப்படுவது என்பதைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ______
    அ) முறையெனப்படுவது ஆ) முறைஎனப்படுவது இ) முறையைப்படுவது ஈ)முறைப்படுவது

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12,13,14,15 ) விடை தருக.**

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______
    அ) பாரதிதாசன் கவிதைகள் ஆ) பாரதியார் கவிதைகள் இ)கலித்தொகை ஈ) தொல்காப்பியம்
13. இப்பாடலின் ஆசிரியர் ______
    அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
14. 'தொல்லை' என்பதன் பொருள் ______
    அ) இன்பம் ஆ) கொடை இ) துன்பம் ஈ) எல்லை
15. இதில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள்______
    அ) வாழ்க-தமிழ்மொழி ஆ) வாழ்க-வாழ்க இ) சூழ்கலி-தமிழ் ஈ) சுடர்க -தமிழ்நாடே



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

**பகுதி - II (மதிப்பெண்கள்: 18) பிரிவு 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**[வினா எண்: 21 கட்டாயமாக விடையளிக்கவும்]**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
    அ) திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
    ஆ) தமிழ்மொழி உலக மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.
17. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?
18. திரு.வி.க சங்கப் புலவர்களாக குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக
19. பட்ட மரம் எதனை நினைத்துக் கவலை அடைந்தது?
20. சான்றோர்க்கு அழகாவது எது?
21. 'கணைகொடிது 'எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடடையளிக்க** **5 x 2 = 10**

22. மெய்யெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
23. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
24. மயங்கொலி எழுத்துகள் யாவை?
25. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க
    அ) சிரம் என்பது _____________ (தலை/தளை)
    ஆ) வீட்டு வாசலில் _____________ இட்டனர்.(கோலம்/கோளம்)
26. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.
    திங்கள்
27. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக
    வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.
28. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக
    உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்

**பகுதி III (மதிப்பெண்கள்: 18) பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக
30. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

    நாம் தமிழ் மக்கள்;நாம் நமது தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் சிறப்பு; அதுவே இயற்கை முறை; போதிய ஒய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்; ஆனால் முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்; தாய்நாடு என்னும் பெயர் தாய் மொழியை கொண்டே பிறப்பது.

    அ) தாய்நாடு என்னும் பெயர் எதைக் கொண்டு பிறக்கிறது?
    ஆ) நாம் எதன் வாயிலாக கல்வி பெறுதல் சிறப்பாகும்?
    இ) நாம் எப்போது வேறு பல மொழிகளைப் பயிலலாம்?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**[வினா எண்: 34 கட்டாயமாக விடையளிக்கவும்]** **2 x 3 = 6**

32. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
33. ஏட்டில் எழுதிய பழங்கதைகளாக முடிந்தவை எவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

34. அடிபிறழாமல் எழுதுக

அ) 'ஆற்றுதல்' எனத் தொடங்கி 'செறா அமை' என வரையுள்ள கலித்தொகை பாடல்

**(அல்லது)**

ஆ) 'மாமழை போற்றுதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக

36. ண,ன,ந எழுத்துகள் பிறக்கும் முறைகளை எழுதுக

37. வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

- இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. அ) நமக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக?

**(அல்லது)**

ஆ) தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக?

39. அ) கலைத் திருவிழா போட்டியில் முதல் பரிசு பெற்ற உன் தோழியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

40. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) படிக்கிறான்- ஆ) போனான்- இ) வருக- ஈ) பேசினாள்- உ) தந்தார்

41. கீழ்காணும் சொற்களை பன்மை சொற்களாக மாற்றுக.

அ) கல் ஆ) மரம் இ) வாழ்த்து ஈ) பூ உ) கை

42. அ) நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

**(அல்லது)**

ஆ) படிப்போம்; பயன்படுத்துவோம்!

1) pun 2) pictograph 3) Medicinal plant 4) punctuation 5) Talent

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக

**(அல்லது)**

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக

44. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக

**(அல்லது)**

ஆ) திருக்குறளின் கருத்தை பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக

45. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

முன்னுரை-நூலகத்தின் தேவை-வகைகள்-நூலகத்திலுள்ளவை- படிக்கும் முறை- முடிவுரை

**(அல்லது)**

ஆ) நான் விரும்பும் கவிஞர்.